தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
**TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY**
(Established under Tamil Nadu Act 33 of 2008)
Gangaiamman Koil Street, Karapakkam, Chennai - 600 097.
Phone No.044-28389040, 044-28389043, E-mail: registrar@tnteu.ac.in Website: www.tnteu.ac.in

**No. TNTEU/R/2019/** **Date: 11.07.2019**

முனைவர்.வை.பாலகிருஷ்ணன், **Ph.D.,**
பதிவாளர் (பொ)

**Web Posting**

பெறுநர்

முதல்வர்கள்/செயலர்கள்
இணைவுப்பெற்ற அனைத்து சுயநிதி கல்வியியல் கல்லூரிகள்,
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்

அய்யா/அம்மையீர்,

**பொருள்:** தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் - இணைவுப்பெற்ற சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் - மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு விரல் ரேகை வருகைப்பதிவு (Biometric Attendance Equipment) கருவி அமைத்து வருகைப்பதிவை உறுதி செய்தல் - NCTE மற்றும் பல்கலைக்கழக விதிப்படி, பதிவேடுகளை முறையாக பராமரித்தல் - தொடர்பாக.

**பார்வை:** NCTE Public Notice நாள்: 10.06.2019.

***

மேற்காண் பார்வைக்கிணங்க, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தில் இணைவுப்பெற்ற சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் கீழ் குறிப்பிட்ட நடைமுறைகளை தவறாமல் செயல்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறது.

1. கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் மற்றும் பணிபுரியும் ஆசிரியர்களின் வருகையை உறுதி செய்யும் பொருட்டு, விரல் ரேகை வருகைப்பதிவு கருவியை Biometric Attendance Equipment) பொருத்தாத கல்லூரிகள் உடனடியாக பொருத்துதல் வேண்டும்.
2. கல்லூரிகள் விரல் ரேகை வருகைப்பதிவு கருவியின் வாயிலாக பதிவு செய்யப்படும் வருகைப்பதிவு விவரத்தினை வாரம் ஒரு முறை கல்லூரியின் இணையதளத்தில் (College website) பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
3. தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் (NCTE) மற்றும் பல்கலைக்கழக விதிப்படி, கல்லூரிகளில் பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள் (Records) மற்றும் ஆவணங்களை (Documents) முறையாக பராமரிக்கப்பட வேண்டும்.
4. கல்லூரிகள் மீது எவ்வித புகார்களும் எழாதவண்ணம் சீரிய முறையில் நடைபெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நடைமுறைகளை செயல்படுத்தாத கல்லூரிகள் மீது தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் (NCTE) மற்றும் பல்கலைக்கழகத்தின் சார்பில் ஆய்வுக்குழுக்கள் அமைக்கப்பட்டு முன்அறிவிப்பின்றி ஆய்வுகள் (Surprise Visit) மேற்கொள்ளப்படும். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் வருகைப்பதிவில் தவறுகள் நடப்பது உறுதி செய்யப்பட்டால், தவறு செய்த கல்லூரிகளின் அங்கீகாரத்தை (Section 17of NCTE Act, 1993') விதிப்படி, இரத்து செய்வதற்கு பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது. எனவே, அனைத்து கல்லூரி செயலர்கள் மற்றும் முதல்வர்கள் மேற்குறிப்பிட்ட நடைமுறைகளை கட்டாயம் தவறாது கடைபிடிக்க வேண்டும் என்று இச்சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

V.Balakrishnan 11.7.19

பதிவாளர் (பொ)